RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1959

OPEN ACCESS

# குமரிமாவட்ட பழங்குடி மக்கள் வாழ்வில் அறக்கோட்பாடுகள்

ஜின்சி டைட்டஸ் [அ, *], எ. ஜாஸ்மின் விஜி [அ]

[அ] தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம், நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), மார்த்தாண்டம்-629165, தமிழ்நாடு, இந்தியா

# Life Style and Moral Principles of Tribal People in Kumari District

Jincy Titus [a, *], E. Jasmin Viji [a]

[a] Department of Tamil and Research, Nesamony Memorial Christian College, (Affiliated to Manonmaniam Sundaranar University), Marthandam–629165, Tamil Nadu, India

* Corresponding Author: fertitus@gmail.com

Received: 12.09.2022
Revised: 23-10-2022
Accepted: 08-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Human beings all around the world are leading their life with certain rules and restrictions. Many characteristics can be found among this group. They follow good moral principles in their life. The reasons for such living are obvious. Many legal principles and moral concepts were followed by them such as family life, productivity, worship, fasting and cleanliness. Systematic studies about the tribal people of Kumari district have been going on since the arrival of Europeans. Many studies have been conducted based on the life style of tribal people. The studies help us to know the reason why they are living as a tribal people in forest areas and reason behind it. The article explores the lifestyle and the moral principles of tribal people in Kanyakumari district.

**Keywords:** Worship, Life Style, Kumari District Tribes, Moral

## முன்னுரை

உலகில் வாழும் அனைத்து மக்களுமே தனக்கென குறிப்பிட்ட விதிமுறைகளையும், வரையறைகளையும் கொண்டு கட்டுப்பாடுடன் வாழ்க்கையினை நடத்தி வருகின்றனர். இக்கூட்டத்திடையே அநேக குணாதிசயங்களை கண்டு கொள்ள முடியும். வாழ்வில் கையாண்டு செய்யும் அனைத்து செயல்களிலும் தனக்கென தனிப்பட்டதும், சமுகத்துடனும் தொடர்புடையதுமான அநேக நீதி நெறிகளையும், அறம் சார்ந்த கருத்துக்களையும் பின்பற்றுகின்றனர். குடும்ப வாழ்க்கை, உற்பத்திமுறை, கடவுள் வழிபாடு, விரதம், சுத்தம் செய்தல், கொல்லாமை போன்றவைகளை கைக்கொண்டு வாழ்கின்றனர். இதனையே முறையான அணுகுமுறைகளுடன் இக்கட்டுரையில் கண்டுகொள்ள முடியும்.

## பழங்குடிகளின் வாழ்க்கை முறை

குறிப்பாக காணி மக்கள் கூட்டம் கூட்டமாக கூடாரங்களை கட்டி நாடோடிகளாக வாழ்க்கையினை வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்று அறிவியலின் மாற்றத்தால் அறத்தின் வளர்ச்சியினாலும் மக்கள் கூடாரங்களை விட்டு சொந்தமாக வீடுகளை கட்டி வாழ்க்கையினை வாழத்தொடங்கினார். இது போன்று மரியாதையும் இல்லாத நிலை காணப்பட்டது. ஆதி காலங்களில்


காட்டு மிராண்டித்தனமும், கள்ளுண்ணுதல், விபச்சாரம், போதை பழக்கம் மற்றும் குழந்தை திருமணம், மற்றும் கட்டுப்பாடுகள் இல்லாத வாழ்க்கையினை வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்று அறம் சார்ந்த விழிப்புணர்வுகளும் அறிவியலின் வளர்ச்சியும் ஆக்கப்பூர்வமான வாழ்க்கை முறையில் வாழ வழிவகுக்கிறது.

## அறத்தின் வேறுபாடுகள்

மனிதன் தோன்றிய காலம் தொட்டே மனிதனை குணம் கொண்டு விதிக்கக்கூடியது இவ்வுலகத்தின் வழக்கம் ஆகும். மக்களிடையே அழகு எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே போன்று அறிவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இதே போன்று சமூகத்திடையே மற்ற மக்கள் மதிக்க வேண்டுமானால் அறம் - நீதி நெறி மிக முக்கியமான ஒன்று ஆகும். "மனிதனைப் பிற விலங்குகளிடமிருந்து வேறுபடுத்துவன அவனுடைய சிந்திக்கும் திறனும் ஒழுக்க நெறிமுறைகளுமே என்றும் நெறிமுறை கட்டுப்பாடு ஒழுக்கம் ஆகியவை அறநெறித் திறனாய்வுக்கு அடிப்படையாகக் கருதப்படுகிறது (Nadarasan, 2012). அறம் அனைத்து மக்களிடையும் ஒரே போன்று காணப்பட்டது. முற்றிலும் வேறுபட்டு காண முடியும். சாதி - சாதியும், குலம் - குலமும், இனம் - இனத்திடையும் அறவாழ்வு வேறுபட்டு காணமுடியும்.

## அறம் தோற்றமும், வளர்ச்சியும்

அறிவுடைய சான்றோர்கள் தம் வாழ்வில் அனுபவித்தறிந்த உண்மைகள் அறம் அல்லது நீதி எனப்படுகிறது. அறம் என்பது மக்களிடையேயும் சமுகத்திடையேயும் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பது ஆகும். நீதிக் கருத்துக்கள் பழங்குடி மக்களை மனித இனத்துடன் நன்கு வாழ வழி செய்கிறது. தீமையிலிருந்து காத்து நல்வழிப்படுத்துகின்றது. அறம் என்பது வாழ்க்கை நெறியாகவே போற்றினர். ஒழுக்க நெறிகளின் தொகுப்பாக அறம் மதிக்கப்படுகிறது.




படம்-1. அறத்தின் பண்புகள்

## பழங்குடி மக்களிடையே அறவாழ்வு

பழங்குடி இனத்தார்கள் நிரந்தரமான குடியிருப்பு, தொழில் போன்றவற்றைக் கொண்டிருக்க மாட்டார்கள். இவர்கள் வசதிக்கேற்பக் குடியிருப்புக்களையும் தொழில் முறைகளையும் அமைத்துக் கொள்கின்றனர். "பழங்குடி இனத்தவரின் பெரும்பான்மையோர் இந்நூற்றாண்டின் முற்பகுதிவரை இலை தழைகளையும், மர உரியையும் ஆடையாகப் பயன்படுத்தி வந்தனர்." காணக்காரப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல் (Dharmaraj, 2012). ஆடையணியாமல் வாழ்ந்த மக்கள் இன்று உயர் சாதி மக்களுக்கு இணையாக உயர்ரக ஆடைகளை அணியும் பழக்கம் இவர்களிடையேயும் கண்டு கொள்ளலாம். வாய்மொழியாக பேசும் போது கெட்ட வார்த்தைகளை கூச்சம் இன்றி பேசுவது வழக்கம். ஆனால் இன்று கல்வியும், அறிவியலும், அறமும் வளர்ந்ததுடன் இப்பழக்கம் கண்டுகொள்ள முடியாது.

அட்டவணை 1. அறத்தின் குணங்கள்

| வரி. எண் | அறம் | விளக்கம் |
|---|---|---|
| 1. | இல்லறம் | 1. கொடுத்தலும்<br>2. அழித்தலும்<br>3. கோடலும்<br>4. இன்மையும் ஒழுக்கம் புணர்தல்<br>5. புணர்ந்தோர் பேணல் |
| 2. | துறவறம் | 1. துறவும்<br>2. துடக்கம்<br>3. தூய்மை<br>4. தலம்<br>5. அறவினை ஓம்பல் |

அறவாழ்வு என்பது பழங்குடி மக்களின் ஒழுக்க நடத்தையைப் பற்றியது ஆகும். நல்ல செயல் எது? தீயச்செயல் எது? என்பது வேறுபடுத்திக் காட்டுவது அறம் ஆகும். அறம் என்பது நல்ல குணங்களைக் குறிப்பது ஆகும்.

## அறம் வளரக் காரணம்

பழங்குடியினர் இரத்த உறவுடைய குழுவினராகக் காணப்படுவதால் அவர்களிடம் காணப்படும் சிக்கல்கள் குறைவாகவே உள்ளன. இவர்களிடம் வழங்கப்படும் சட்டங்கள் அனைத்தும் ஏட்டில் எழுதப்படாத மரபு சார் சட்டங்கள் ஆகும்.

அட்டவணை 2. அறத்தின் உயர்ந்த நிலைகள்

| தவறுகள் | தண்டனைகள் |
|---|---|
| 1. பொய் சொல்லுதல் | அபராதம் விதித்தல், பிரம்பினால் அடித்தல், குனிந்து நிற்கச் செய்தல். |
| 2. களவு செய்தல் | அபராதம் விதித்தல், அடி கொடுத்தல், அரையில் துண்டு மட்டும் உடுத்துக் குனிந்து நிற்கச் செய்தல். |
| 3. விபச்சாரம், காதல் | பாட்டப்புரையில் இருப்பவர்களுக்கு முறுக்கான் (வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு) வழங்கச் செய்தல் வேண்டும், அபராதம் விதித்தல். |
| 4. கீழ்ப்படியாமை | பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகளின் முதுகில் கூணக்கல் வைத்துக் குனிந்து நிற்கச் செய்கின்றனர். பெண்கள் கால்களை நீட்டி உட்கார்ந்த நிலையில் இரு கைகளை மூட்டுப் பாகத்தில் தொட வைத்த நிலையில் காலை முதல் மாலை வரையிலும் அமரச்செய்தல். |
| 5. தீயவார்த்தைகள் பேசுதல் | காந்தாரி மிளகை (சீனி மிளகு) உடலில் அரைத்துப் பூசுதல், தவறு செய்தவனைக் கட்டிவைத்து எறும்புக்கூட்டை அவன் மேல் இடுதல். |
| 6. கூடா ஒழுக்கம் | ஒரே குடும்பத்திலுள்ள ஆண் பெண் உறவு கூடா ஒழுக்கமாகக் கருதப்படுகிறது. இத்தகைய குற்றம் புரிந்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டுத் தங்கள் இனத்தை விட்டு கடத்தப் படுகின்றனர். |

இவ்வாறான தண்டனைகள் காணப்படுவதன் மூலம் அறம் உயர்நிலையில் காணப்படும்.

## உணவு முறையில் அறத்தின் பங்கும்

பழங்குடி மக்கள் உணவு முறைகளை அதிகம் பயன்படுத்துவது இயற்கையானவைகள். அதனால் இயற்கையினை கடவுள் போன்று மதிக்கின்றனர். சூரியனையும், காற்றையும் நீர் நிலைகளையும் அதிகம் பயத்தோடும், பக்தியோடும் வணங்குகின்றனர். இயற்கையாக கிடைக்கும் உணவு வகைகளையே அதிகம் சாப்பிடுகின்றனர். மா, பலா, வாழை எல்லா நாட்களும் சாப்பிடும் உணவு ஆகும். பழங்குடி மக்கள் நீர் நிலைகளை சுத்தமாகவும் அற நெறியுடனும் உபயோகிக்கின்றனர். குடிநீருக்கு பயன்படுத்தும் நீர் நிலைகளின் பெண்கள் தீட்டு நேரம் தண்ணீர் எடுப்பதற்கு செல்லுவதில்லை. குடிநீர் நிலைகளையும், கோவில்களையும் ஒரே போன்று மதிக்கின்றனர்.

## முடிவுரை

சமுதாயத்தின் தேவைகளும் முதன்மைகளும் காலந்தோறும் மாற்றம் பெற்று வருகின்றன. மக்களின் வாழ்வில் அனைத்து குடிகளிலும் அறம் முக்கியமான ஒன்று. ஆனால் நாம் சமுகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையினை எங்கும் எடுத்து கூறுவது இல்லை. பழங்குடி மக்களின் வாழ்வியலில் காணப்படும் வாழ்க்கை முறைகளை எடுத்துக்கூறி அவர்களின் அகம், புறம் வாழ்க்கையினை வெளிக்கொணர்ந்து விளக்கப்படுவது நல்லது. பழங்குடி மக்களின் வாழ்வில் அறக்கோட்பாடுகள் காணப்படுகின்றன என்பது ஆராய்ந்து அறிந்து இவற்றை வெளிக்கொணர்வதின் மூலம் வேறு இனமக்களின் வாழ்வியலில் அறம் சார்ந்த கருத்துக்களை ஆராய்ந்து ஆய்வுகளை மேற்கொள்ள வழிவகுக்கும். சமூகத்தில் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறைமைகளை அறிந்துக்கொள்ளவும் அவர்களின் வாழ்வில் தூய்மை, கண்ணியம், கட்டுப்பாடு பற்றிய சிந்தனைகளையும், அறநெறியின் கண்ணோட்டமும் அறிந்து கொள்ள முடியும். எத்துன்பத்தில் வாழ்ந்தாலும் அறம் விட்டுக்கொடுத்து வாழாமல் வாழ வேண்டும் என்பதும், நுட்பங்கள் வளர்ந்தாலும் நாகரிகம் உயர்ந்தாலும் அறம், சுத்தம், தூய்மை மக்களிடையே என்றும் தொடர வேண்டும் என்பது ஆகும்.

## References

Dharmaraj, P. (2012) Kanikaarap palankudi makkalin valakatrariyal, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Nadarasan, T.S. (2012) Thiranaaivukalai, New Century Book House, Chrnnai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License